Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.39/2023**

**2025-ம் ஆண்டு ஜுன் மாதம் 03-ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 13 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.முத்துக்குமார் நகல் பரிசோதகர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 13 | தொழில் | - | வட்டார போக்குவரத்து அலுவலர் சென்னை பூந்தமல்லி |
| பெயர் | - | ரவிக்குமார் | வட்டம் | - | சென்னை |
| த/பெ | - | உத்தமபுத்திரன் | சமயம் | - | |
| கிராமம் | - | பூந்தமல்லி | வயது | - | 53/2025 |
| சாதி | - | | | | |

| | |
|---|---|
| நாள் ( Dated) : 03-06-2025 | |
| **நீதிமன்ற புள்ளி ( IN COURT POINT)** | |
| இடம் ( Venue) | - நீதிமன்ற காணொலி அறை. வால்பாறை |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | - தலைமை எழுத்தர், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், வால்பாறை |
| இந்த வழக்கில் வழக்கறிஞர்கள் | அரசுக்காக – S.P.ராமச்சந்திரன் LLM.APP Gr-1 |
| | எதிரிக்காக வழக்கறிஞர் திரு. பெருமாள், B.A.,B.L., |
| **தொலைதூர புள்ளி (IN REMOTE PONIT)** | |
| இடம் ( Venue) | 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் பூந்தமல்லி. |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | சக்தீஸ்வரன் டெக்கீனிக்கல் மேன்பவர் 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் பூந்தமல்லி. |
| சாட்சி ( Witness) | ரவிக்குமார் (அ.சா. 13) |

சாட்சி 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் பூந்தமல்லி. நீதிமன்ற காணொலி அறைக்கு வரவழைக்கப்பட்டு நீதிமன்ற காணொலி சாதனம் மூலம் விசாரணை செய்யப்படுகிறது.

**<u>03-06-2025</u>**

**( எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது சென்னை பூந்தமல்லி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02-02-2023-ம் தேதி நான் வால்பாறை வட்டார

போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணியில் இருந்தபோது வால்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தின் படி குற்ற எண் 10/2023, ச/பி. 279, 337, 304(A) இதச வழக்கில் விபத்துக்குள்ளான TN37 CN2017 என்ற TVS Scooty Pep PLUS என்ற இரு சக்கர வாகனத்தை காலை 07.00 மணிக்கு வால்பாறையில் உள்ள யூனிட் அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். ஆய்வின் போது வாகனத்தில் கீழ்கண்ட சேதங்கள் தென்பட்டன. 1. முன்பக்க முகப்பு விளக்கு விழகியிருந்தது. 2. Electrical line சேதமடைந்திருந்தது. இரு சக்கர வாகனம் ஓட்டி பார்க்கும் நிலையில் இல்லை. இறுதியாக விபத்தானது வாகனத்தில் இயந்திர கோளாறு காரணத்தினால் விபத்து ஏற்படவில்லை என சான்று வழங்கினேன். **(நான் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

விபத்து 19-01-2023-ம் தேதி நடந்ததாக உள்ளது என்றால் சரிதான். 15 நாட்கள் காலதாமதமாக 02-02-2023-ம் தேதி எனக்க வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது என்றால்சரிதான். இடைபட்ட காலத்தில் வாகனம் யாரிடத்தில் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாகத்தணிக்கையில் அந்த வாகனத்தில் ஆக்ஸிலேட்டர் கேபிளை நான் ஆய்வுசெய்யவில்லை என்றால் எலக்ட்ரிக்கல் சேதமடைந்திருந்ததால் வாகனத்தை ஓட்டிபார்த்து ஆக்ஸிலேட்டர் கேபிளை ஆய்வுசெய்ய இயலவில்லை. நான் ஆக்ஸிலேட்டர் கேபிளை ஆய்வுசெய்யவில்லை அதனால் வாகனத்தை சரிவர ஆய்வு செய்யாமல் வாகன தணிக்கை அறிக்கை வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.